# தமிழ்

## தரம்

# 1

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | - | *2015* |
| இரண்டாம் பதிப்பு | - | *2016* |
| மூன்றாம் பதிப்பு | - | *2017* |
| நான்காம் பதிப்பு | - | *2018* |
| ஐந்தாம் பதிப்பு | - | *2019* |
| ஆறாம் பதிப்பு | - | *2020* |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0030-5

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

Published by: Educational Publications Department
Printed by: State Printing Corporation

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.

## முன்னுரை

*சிறந்த கல்வியறிவும் பண்பாடும் நிரம்பப்பெற்ற ஒரு பரம்பரையினாலேயே உலகை மிகவும் அழகான இடமாக மாற்றமுடியும். அதனால் ஒரு நாட்டின் கல்வியை மிகவும் சக்திவாய்ந்ததாக மாற்றுவதற்கு எப்போதும் முயற்சிப்பது அவசியமாகும். இந்த பூகோள கிராமத்தில் தினமும் உருவாகும் பெறுமதியானதும் செழிப்பானதுமான வரையறையற்ற புதிய அறிவுக்காக எமது கல்வி முறைமையைப் பொருந்தச் செய்வது மிகச் சிறந்தது. இந்தப் புதிய போக்குகளுக்கு ஏற்றவாறாக நல்லதொரு மாணவர் சமுதாயமொன்றை உருவாக்குவது எமது கடமையாகும். இப்பெறுமதிமிக்க பணிக்காக தரம் வாய்ந்த கற்றல் சாதனங்களை உருவாக்குவது இத்திணைக்களத்தின் நோக்கமாகும்.*

*பாடநூல் என்பது ஓர் அற்புதமான கற்றல் சாதனமாகும். அது அறிவு, திறன், மனவெழுச்சி மிக்க பிரசைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகும்.*

*இலவசக் கல்வியின் பெறுமதிமிக்க ஒரு பரிசாக இந்தப் பாடநூல் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. அதற்காக அரசாங்கம் செலவிட்டுள்ள பெருந்தொகையான பணத்திற்கு பெறுமதி சேர்க்கும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநூலை உரிய முறையில் பயன்படுத்தி, பாதுகாத்து, ஒரு பூரணமான பிரசையாக நாளைய உலகில் அடியெடுத்து வைப்பதற்கு உங்கள் அனைவருக்கும் ஆற்றல் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.*

*இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்யும் பணியில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர் மற்றும் பதிப்பாசிரியர் குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**பீ. என். அயிலப்பெரும**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்*
*இசுருபாய*
*பத்தரமுல்ல*
2020. 06. 26

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**பீ. என். அயிலப்பெரும**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## இணைப்பாக்கம்

**லெனின் மதிவானம்**
*பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

**யூ. எல். உவைஸ்**
உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

**வீ. வசந்தி**
*ஆசிரியர்,*
*புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.*

**ஜனாபா கே.எம். நூர்ஜஹான்**
*ஆசிரியர்,*
*ஹமீட் அல் ஹுஸைனியா தேசிய பாடசாலை, கொழும்பு - 12.*

## பதிப்பாசிரியர்கள்


**லெனின் மதிவானம்**
*பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

**வீ.என்.எஸ். உதயசந்திரன்**
*விரிவுரையாளர்,*
*தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.*

**ரீ. மாணிக்கராஜா**
*ஆசிரியர்,*
*விவேகானந்தா கல்லூரி, கொழும்பு - 13.*


## அட்டைப்படம், தளக்கோலம், கணினி தட்டெழுத்து


**எச்.எஃப். ரிஸ்னா**
*கணினி வடிவமைப்பாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*


## ஓவியங்கள்


**எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா**
*ஆசிரியர்,*
*ஐரபி தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட்.*

**கே. ஏ. சமன் களுபோவில**
*ஆசிரியர்,*
*கம்/ அனுர மத்திய மகா வித்தியாலயம், யக்கலை.*

# தமிழ் மொழி வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

- சுப்பிரமணிய பாரதியார் -

# உள்ளடக்கம்



| | | |
|---|---|---|
| 1. | படம் பார்த்து கதை கூறுவோம் | 1 |
| 2. | படம் பார்த்து காற்றாடி செய்வோம் | 3 |
| 3. | அழகான பூ | 4 |
| 4. | என் பந்து | 9 |
| 5. | மரம் பேசுகிறது | 10 |
| 6. | பாடல் பாடுவோம் | 11 |
| 7. | ஒலிகள் | 12 |
| 8. | நிறங்கள் | 19 |
| 9. | பாடுவோம் | 23 |
| 10. | சேர்ந்து செய்வோம் | 25 |
| 11. | வாசிப்போம் | 26 |
| 12. | யாவருக்கும் உதவுவோம் | 33 |
| 13. | எழுத்துகள் | 35 |
| 14. | வாசிப்போம் | 36 |
| 15. | தகவல் | 40 |
| 16. | அறிந்து கொள்வோம் | 41 |
| 17. | புதிர்கள் | 42 |
| 18. | விடுகதைகள் | 44 |
| 19. | நல்ல பண்பு | 45 |
| 20. | சுவைகள் | 47 |
| 21. | சொற்கள் அறிவோம் | 48 |
| 22. | பழமொழிகள் | 49 |
| 23. | சிறுவர் சந்தை | 50 |
| 24. | ஆத்திசூடி | 53 |

# 1. படம் பார்த்து கதை கூறுவோம்












# படம் பார்த்து கதை கூறுவோம்











# 2. படம் பார்த்து காற்றாடி செய்வோம்










# 3. அழகான பூ

பூ



பூ மரம்





அதோ பாருங்கள்

அழகான பூ.





மேலேயுள்ள பூ
அழகானது.



அதோ பாருங்கள்

பல நிறப் பூக்கள்.



பூக்களைப் பறிப்போம்.


அங்கே பாருங்கள்

அவை மிகவும் அழகானவை.






# 4. என் பந்து



வண்ண வண்ணப் பந்து
வானில் பாயும் பந்து
குட்டிக் கையால் தட்டினால்
குதித்து ஓடும் பந்து.

# 5. மரம் பேசுகிறது



நான் மரம்.

நான் பூ, காய், கனி தருவேன்.

நிழல் தருவேன்.

நான் உங்களுக்கு உதவுவேன்.

என்னை வெட்டாதீர்கள்.

# 6. பாடல் பாடுவோம்

காகம் அந்தப் பக்கம் கா... கா... கா...

கிளி இந்தப் பக்கம் கீ.. கீ.. கீ..

குயில் மரத்தில் கூ... கூ.... கூ...

கோழி கூரையில் கொக்... கொக்... கொக்...

பசுவும் கன்றும் ம்மா... ம்மா... ம்மா...

வெள்ளைப் பூனை மியாவ்.. மியாவ்.. மியாவ்..

மேயும் ஆடு மே.... மே.... மே.....


காக்கும் நாய் வள்.... வள்..... வள்....

டம்..... டம்... டும்.... டும்..... கச்சேரி

நடக்குது பாரு ஊருக்குள்ளே.....

# 7. ஒலிகள்

கிளி - கீ.... கீ.... கீ



குருவி - கீச்... கீச்... கீச்....




**நாய்** - வள்... வள்... வள்...




**காகம்** - கா... கா... கா...



**கோழி** - கொக்... கொக்... கொக்...



**பூனை** - மியாவ்... மியாவ்... மியாவ்



# வேறு ஒலிகள்


**புகை வண்டி** - சுக்குப் பக்கு.. சுக்குப் பக்கு..கூ.. கூ



**மாட்டு வண்டி** - கட... கட...




**பட்டாசு** - படார்... படார்...



**இடி முழக்கம்** - டமார்... டமார்...



**மேளம்** - டும்... டும்...



**காற்சலங்கை** - கலீர்... கலீர்



| | |
|---|---|
| நாய் | குரைக்கும் |
| காகம் | கரையும் |
| ஆடு | கத்தும் |
| குருவி | கீச்சிடும் |
| பூனை | சீறும் |
| குயில் | கூவும் |
| வண்டு | இரையும் |

# 8. நிறங்கள்

காகம் கறுப்பு நிறம்




வானம் நீல நிறம்




கிளி பச்சை நிறம்



மாம்பழம் மஞ்சள் நிறம்



கத்தரிக்காய் ஊதா நிறம்



தக்காளிப்பழம் சிவப்பு நிறம்



# பால் வெள்ளை நிறம்



# 9. பாடுவோம்

## செல்லக் குட்டி



சின்னச் சின்ன நாய்க் குட்டி

செல்லமான நாய்க் குட்டி

பள்ளிக்கூடம் விட்டு வந்தால்

பாய்ந்து வரும் நாய்க் குட்டி

கொஞ்சம் நானும் பக்கம் வந்தால்

கொஞ்சி வரும் நாய்க் குட்டி

# நிற்கலாம் நிற்கலாம்



நிற்கலாம் நிற்கலாம்

வட்டமாக நிற்கலாம்

கையைத் தூக்கி நிற்கலாம்

கைகோர்த்து நிற்கலாம்

குனிந்து நிமிர்ந்து நிற்கலாம்

குதித்துக் குதித்து நிற்கலாம்

நிற்கலாம் நிற்கலாம்

வரிசையாக நிற்கலாம்

# 10. சேர்ந்து செய்வோம்

வகுப்பறைக்குச் செல்வோம்

அமைதியாக இருப்போம்

புத்தகத்தை எடுப்போம்

பாடம் படிப்போம்

சொற்கள் எழுதுவோம்

# 11. வாசிப்போம்

## அ, ஆ ஒலிச் சொற்களை வாசிப்போம்





| | |
|---|---|
| கரும்பு | காகம் |
| சட்டி | சாடி |
| தம்பி | தாமரை |
| நண்டு | நாய் |
| பந்து | பால் |
| மரம் | மாடு |
| வண்டு | வாழை |

கரும்பு இனிக்கும்.

தம்பி அடித்தான்.

பாடம் படிப்போம்.

## இ, ஈ ஒலிச் சொற்களை வாசிப்போம்





| | |
|---|---|
| கிளி | கீரை |
| சிலந்தி | சீப்பு |
| திங்கள் | தீபம் |
| நிலா | நீலம் |
| பிள்ளை | பீடை |
| மிளகு | மீன் |
| விசிறி | வீடு |

கிளி பேசும்.

நிலா தோன்றியது.

கீரை சத்தான உணவு.

## உ, ஊ ஒலிச் சொற்களை வாசிப்போம்





| | |
|---|---|
| குருவி | கூடை |
| சுளகு | சூரியன் |
| தும்பி | தூண் |
| நுங்கு | நூலகம் |
| புறா | பூமாலை |
| முகம் | மூக்கு |

தும்பி பறந்தது.

பூமாலை கட்டுவோம்.

குதிரை வேகமாக ஓடும்.

## எ, ஏ ஒலிச் சொற்களை வாசிப்போம்





| | |
|---|---|
| கெண்டி | கேணி |
| செடி | சேவல் |
| தென்னை | தேர் |
| நெருப்பு | நேற்று |
| பெட்டி | பேன் |
| மெத்தை | மேசை |
| வெள்ளை | வேடன் |

நெருப்பு சுடும்.

சேவல் கூவும்.

பால் வெள்ளை நிறம்.

# ஐ ஒலிச் சொற்களை வாசிப்போம்





| | |
|---|---|
| கை | தங்கை |
| சைகை | பச்சை |
| மைனா | பொம்மை |
| தை மாதம் | விதை |
| வைகாசி | பறவை |

விதை முளைத்தது.

தங்கை ஓடினாள்.

இலை பச்சை நிறம்.

## ஒ, ஓ ஒலிச் சொற்களை வாசிப்போம்





| | |
|---|---|
| கொக்கு | கோபுரம் |
| சொண்டு | சோளம் |
| தொப்பி | தோடம்பழம் |
| நொண்டி | நோய் |
| பொட்டு | போட்டி |
| மொழி | மோர் |

மோர் குடிப்போம்.

தொப்பி அணிந்தேன்.

கொக்கு மீனைப் பிடித்தது.

## ஔ ஒலிச் சொற்களை வாசிப்போம்





ஔவையார் ஔடதம்

கௌபி கௌரவம்

சௌக்கியம் மௌனம்

பௌர்ணமி வௌவால்

பௌர்ணமி நிலவு.

வௌவால் பழம் தின்னும்.

ஔவையார் ஆத்திசூடி பாடினார்.

# 12. யாவருக்கும் உதவுவோம்




**ஆசிரியர்** பிள்ளைகளே, 'பெரியோர்கள்' என்று நாம் யாரைச் சொல்லுவோம்?

**தேவி** தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா

**ஆசிரியர்** வீட்டில் உள்ளவர்கள் மட்டும் பெரியோர் அல்லர். எமக்கு உறவினர் அல்லாத முதியவர்களும் பெரியோர்கள்தான்.

**கோபி** அதிபர், ஆசிரியர்கள் கூட பெரியவர்கள்தான்.

**ஆசிரியர்** சரி. அப்படியானால் 'உதவுங்கள்' என்றால் என்ன?

**தேவி** உணவு, பணம் கொடுத்தல்...

**கோபி** வீதியில் செல்பவர்கள் விழுந்தால் தூக்கிவிடுவதும் உதவுவது தானே?

**ஆசிரியர்** ஆமாம் நன்கு யோசிக்கிறீர்கள்.

**ராணி** கண் தெரியாதவர்களுக்கும் உதவ வேண்டும்.

**ஆசிரியர்** ஆமாம், நாம் யாவருக்கும் உதவி செய்து வாழ வேண்டும்.

# 13. எழுத்துகள்

| | |
|---|---|
| *1. பறக்கும் எழுத்து* | ஈ |
| *2. சுடும் எழுத்து* | தீ |
| *3. அழைக்கும் எழுத்து* | வா |
| *4. துரத்தும் எழுத்து* | போ |
| *5. கேட்கும் எழுத்து* | தா |
| *6. பூக்கும் எழுத்து* | பூ |
| *7. சுட்டும் எழுத்து* | நீ |

# 14. வாசிப்போம்

## சொற்களை வாசிப்போம்

| குறுகிய ஓசை | நீண்ட ஓசை |
|---|---|
| 1. தடி | தாடி |
| 2. நடி | நாடி |
| 3. படி | பாடி |
| 4. மடு | மாடு |
| 5. மலை | மாலை |
| 6. மடி | மாடி |
| 7. மதம் | மாதம் |
| 8. பதம் | பாதம் |
| 9. வனம் | வானம் |
| 10. நிலம் | நீலம் |

## பெயர்ப் பலகைகளை வாசிப்போம்

1. அதிபர் அலுவலகம்

2. நூலகம்

3. ஆரம்பப் பிரிவு

4. விஞ்ஞானக் கூடம்

5. சிற்றுண்டிச் சாலை

6. கணினிக் கூடம்

7. தபாலகம்

8. வைத்தியசாலை

9. பாடசாலை

10. வங்கி

## சொற்றொடர்களை வாசிப்போம்

1. கறுப்புப் பூனை
2. வெள்ளை முயல்
3. பச்சைக் கிளி
4. அழகான பறவை
5. சுவையான உணவு
6. மாடி வீடு
7. பெரிய மரம்
8. சிறிய செடி
9. வெள்ளைப் பசு
10. ஓடி விளையாடு

# வாக்கியங்களை வாசிப்போம்

*1. கிளி அழகான பறவை.*

*2. பசு சாதுவான மிருகம்.*

*3. பசு பால் தரும்.*

*4. யானை பெரிய மிருகம்.*

*5. மயில் அழகாக ஆடும்.*

*6. சிங்கம் காட்டில் வாழும்.*

*7. சூரியன் காலையில் உதிக்கும்.*

# 15. தகவல்

1. இரவில் நன்றாகக் கண் தெரியும் பிராணி

**பூனை**



2. எசமானைக் கண்டால் வாலை ஆட்டும் பிராணி

**நாய்**



3. பேசப் பழக்கினால் பேசும் பறவை

**கிளி**




4. எழுந்து நின்று தூங்கும் மிருகம்

**யானை**



# 16. அறிந்து கொள்வோம்

பேருந்துத் தரிப்பிடம்



முன்னால் பாதசாரிகள் கடவை



பாடசாலைச் சிறுவர் கடவை



ஆண் / பெண் மலசலகூடம்



## 17. புதிர்கள்

பழங்களை விரும்பி உண்பேன்.

முதுகில் மூன்று கோடுகள் இருக்கின்றன.

நான் யார்?

அணில்




தண்ணீரில் நீந்தி மகிழ்ந்திடுவேன்.

தரையில் விழுந்தால் துடித்திடுவேன்.

நான் யார்?

**மீன்**



# 18. விடுகதைகள்

1. ஒரு குப்பிக்குள் இரண்டு எண்ணெய் அது என்ன?



**முட்டை**

2. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன் அவன் யார்?



**எறும்பு**

3. நாலு கால் வீரன் நன்றிக்கு உதாரணம் அவன் யார்?



**நாய்**

4. ஓட்டு வீட்டுக்காரனுக்கு வேகமாக நடக்க வராது அவன் யார்?



**ஆமை**

5. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

**கிளி**



# 19. நல்ல பண்பு



அது ஓர் அடர்ந்த காடு.

அங்கு சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது.
அந்தச் சிங்கத்திற்கு நோய் ஏற்பட்டது.
வைத்தியரிடம் செல்ல முடியவில்லை.
உதவிக்கு யாரும் இல்லை.
நரி ஒன்று வந்தது.
சிங்கம் நரியிடம் உதவி கேட்டது.



‘‘சிங்கமே, நீயோ கொடிய மிருகம். உனக்கு உதவி செய்ய என்னால் முடியாது’’ என நரி சொன்னது.

அப்போது முயல் ஒன்று வந்தது.

சிங்கம் முயலிடம் உதவி கேட்டது.



‘‘நீயோ கொடிய மிருகம்.
என்னைச் சாப்பிட்டு விடுவாய்.
ஆனாலும் நான் உதவி செய்கிறேன்.
தீயோரானாலும் உதவுவது நல்ல பண்பு’’
எனக் கூறி சிங்கத்தை வைத்தியரிடம்
அழைத்துச் சென்றது.

**‘‘தீயோரானாலும் உதவுவதே நல்ல பண்பு’’**

# 20. சுவைகள்

கரும்பு தின்றால் இனிக்கும்
மாங்காய் புளிக்கும்




மிளகாய் கடித்தால் உறைக்கும்
பாகற்காயும் கசக்கும்




உப்பு சுவைக்க உவர்க்கும்
பாக்கு நாவில் துவர்க்கும்




# 21. சொற்கள் அறிவோம்

**ஓரெழுத்துச் சொற்கள்**

பூ
தீ
வா
தை
போ

**ஈரெழுத்துச் சொற்கள்**

நரி
ஆசை
காடு
காலை
நோய்

**மூவெழுத்துச் சொற்கள்**

வயது
கதவு
முயல்
பிராணி
பறவை

# 22. பழமொழிகள்

★ அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

★ இளங்கன்று பயம் அறியாது.

★ உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

★ காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

★ ஆழம் அறியாமல் காலை விடாதே.

# 23. சிறுவர் சந்தை


நாங்கள் நாளைக்கு வகுப்பில் சந்தை நடத்துவோம்.

எல்லோரும் கலந்து கொள்ளுங்கள்.

அதற்கான பொருள்களைக் கொண்டு வாருங்கள்.

சந்தைக்கு உங்கள் பெற்றோரையும்

வரச் சொல்லுங்கள்.





நாங்கள் பொருள்களை மேசையில் அடுக்குவோம்.

கரட், கத்தரிக்காய், வெண்டிக்காய், முருங்கைக் காய், பாகற்காய் என அடுக்குவோம்.

தேங்காயையும் பழங்களையும் வேறொரு மேசையில் வைப்போம்.



வாருங்கள் வாருங்கள்.

அனைத்துப் பொருள்களையும் மலிவான விலையில் தருகிறோம்.

அனைவரும் சந்தைக்கு வந்து பொருள்களை வாங்கினார்கள்.

## 24. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு

2. ஆறுவது சினம்

3. இயல்வது கரவேல்

4. ஈவது விலக்கேல்

5. உடையது விளம்பேல்

6. ஊக்கமது கைவிடேல்

7. எண், எழுத்து இகழேல்

8. ஏற்பது இகழ்ச்சி

9. ஐயம் இட்டு உண்

10. ஒப்புரவு ஒழுகு

11. ஓதுவது ஒழியேல்

12. ஔவியம் பேசேல்

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

ஆய்த எழுத்து ஃ

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |